**Kalanjiyam International Journal of Tamil Studies**
**களஞ்சியம் - சர்வதேசத் தமிழ் ஆய்விதழ்**
Peer-Reviewed | Open Access | Crossref DOI & Global Indexing | Google Scholar Impact Factor
DOI: https://doi.org/10.63300/kijts15sp012026.35
https://ngmtamil.in/

# பண்டையத் தமிழரின் நம்பிக்கைகள்

**திருமதி. பா.நித்யா,**
தமிழ்த்துறை உதவிப்பேராசிரியர், வே.வ.வன்னியப்பெருமாள் பெண்கள் கல்லூரி,
விருதுநகர். **Ph:6383150233, nithyab@vvvcollege.org**

**முன்னுரை**

சங்க காலத்தில் மக்கள் இயற்கையை முதன்மையாகக் கொண்டு வாழ்ந்தனர். இக்காலகட்டத்தில் மக்களின் நம்பிக்கைகள் இயற்கை வழிபாடு, சகுனம், நடுகல் மற்றும் தெய்வீக ஆற்றல் ஆகியவற்றை மையமாகக் கொண்டு அமைந்திருக்கின்றன. நம்பிக்கை மனித சமுதாயத்தின் ஆணிவேராக உள்ளது. இத்தகைய நம்பிக்கை ஒவ்வொரு காலக்கட்ட மனிதரின் வேறுபட்ட உணர்வாக அமைகின்றது. நம்பிக்கையை சமயநம்பிக்கை, மூட நம்பிக்கை எனப்பகுக்கின்றன. இலக்கியங்கள் அனைத்தும் அவ்வக் காலத்து நம்பிக்கையாகவோ அல்லது வாழ்வியல் நம்பிக்கையாகவோ பெரும்பான்மையாக அமைந்திருப்பது குறிப்பிடத்தக்கதாகும். இத்தகைய பண்டையத் தமிழரின் நம்பிக்கைகள் குறித்து இக்கட்டுரையில் காண்போம்.

**நம்பிக்கை சொற்பொருள் விளக்கம்:**

நம்பிக்கை வாழ்க்கையில் முதன்மை பெறுகின்றது. நம்பிக்கை என்பதற்கு விசுவாசம், ஆணை, உண்மை என்றும் சத்தியம், உறுதிப்பாடு என்றும் மதுரைத் தமிழ்ப் பேரகராதி பல்வேறு பொருள்களைத் தடுகின்றது. நம்பு என்பதற்கு விருப்பம், நாவல், நாகை, ஆசை என்று அகராதிகள் பொருள் தருகின்றன. தொல்காப்பியத்தில் “நம்பும் மேவும் நசையாகும்மே” என்று வருகின்றது. நம்பு என்ற சொல்லிற்கு”நசை” அல்லது “விருப்பம்” எனும் பொருளைத் தருகின்றது. மேலும் நற்றிணை 327ஆம் பாடலில் “நம்புதல்” என்று சொல்லாட்சி நம்பிக்கை என்ற பொருளில் வந்துள்ளமையை அறிய முடிகின்றது. இப்பொழுது நம்பிக்கை என்ற பொருளை வழக்கில் உள்ளது.

**நம்பிக்கையின் வகைகள்**

பண்டையத் தமிழரின் வாழ்வியல் நெறிகளை எடுத்துக் காட்டும் சங்க இலக்கியத்தில் நம்பிக்கைகள் இடம் பெற்றுள்ளன. நம்பிக்கைகள் பல வகைப்படும். பிறப்பு முதல் இறப்பு வரை மனிதன் தன் வாழ்வில் பல வகை நம்பிக்கைகளை கையாளுகின்றான். அவற்றுள்,

- இறை நம்பிக்கை
- ஊழ் பற்றிய நம்பிக்கை
- சோதிபத்தில் நம்பிக்கை
- சகுனத்தில் நம்பிக்கை
- சடங்கு நம்பிக்கை
- கனவு நம்பிக்கை

போன்றனவாகும்.

**இறை நம்பிக்கை**

சங்க இலக்கியத்தில் இறை நம்பிக்கையானது. சமயக் கோட்பாடுகளைத் தாண்டி இயற்கையோடும், மக்களின் வாழ்வியலோடும் ஒன்றிணைத்ததாகக் காணப்படுகிறது. தமிழர்கள் எப்பொழுது தனித்தனிக் குடும்பங்களாக வாழத் தொடங்கினார்களோ அப்பொழுது அவர்களிடம் இறைநம்பிக்கை ஏற்பட்டுவிட்டது. மனிதர்களின் மனதில் தோன்றிய அச்ச உணர்வே தெய்வ நம்பிக்கையை உண்டாக்கியது. இதனை தொல்காப்பியம்,

“மாயோன் மேய காடுறை உலகமும்
சேயோன் மேய மைவரை உலகமும்
வேந்தன் மேய தீம்புனல் உலகமும்
வருணன் மேய பெருமணல் உலகமும்
முல்லை, குறிஞ்சி, மருதம், நெய்தல் எனச்
சொல்லிய மறையாற் சொல்லவும் படுமே”

(தொல்.அகம். நூற்.5)

என்கின்ற நூற்பாவின் மூலம் திருமால், முருகன், இந்திரன், வருணன் போன்ற தெய்வங்களை வழிபடுவது பற்றி அறிய முடிகின்றது. மேலும் புறநானூற்றில் திருமால் பற்றியகுறிப்புக் காணப்படுகிறது.

“மண் உறு திருமணி புரையும் மேனி
விண்ணுயர் புட்கொடி விறல் வெய்யோனும்”

(புறம் : 56)

என்று திருமால் பற்றிய வழிபாடு இருந்ததை அறியலாம். எனவே இறை நம்பிக்கை என்பது தமிழர்களிடையே இருந்ததற்கு பல்வேறு சான்றுகளை பாடல்கள் மூலம் காண முடிகிறது. எனவே தமிழர்கள் இறைநம்பிக்கையில் மிகுந்த ஈடுபாடு உடையவர்களாக இருந்தனர் என்பதும் அறிய முடிகின்றது.

*தமிழ்த்துறை - சங்கரா அறிவியல் மற்றும் வணிகவியல் கல்லூரி (தன்னாட்சி)

**ஊழ் பற்றிய நம்பிக்கை :**

சங்க இலக்கியத்தில் ஊழ் என்பது முன்வினைகளின் பயன் அல்லது தவிர்க்க முயாத இயற்கை விதி என நம்பப்பட்டது. பழவினைப் பயனால் ஒருவருக்கு இன்ப துன்பங்கள் முறைப்படி வந்து சேர்வதையே ஊழ் என்கின்றனர். இத்தகைய வாழ்வினைப் பற்றி திருக்குறளில்,

"ஊழிற் பெருலி யாவுள மற்றொன்று
சூழினும் தான்முன் துறும்" (குறள் – 380)

என்று ஊழை விட வலிமையானது வேறில்லை, அதைத் தவிர்க்க முயன்றாலும் அது முன்னரே வந்து நிற்கும் என்று குறிப்பிடுகின்றது. இது போன்றே,

"நீர்வழிப் படூஉம் புணைபோல் ஆருயிர்
முறைவழிப் படூஉம் என்பது திறவோர்
காட்சியில் தெளிந்தனம்" (புறம் – 192)

என்ற புறநானூற்றுப் பாடலில் நீரோட்டத்தில் செல்லும் தெப்பம் போல் உயிர்கள் ஊழின் வழியில் செல்லும் என்ற பொருள் அறிய முடிகின்றது.

**சோதிட நம்பிக்கை :**

பண்டைய காலத்தில் சோதிடம், நிமித்தம் மற்றும் சகுனம் போன்ற நம்பிக்கைகள் கண்கள் அன்றாட வாழ்வில் கலந்திருக்கின்றன. அறிவியல் சார்ந்த வானியல் கணக்கீடுகள் சங்க இலக்கியங்களில் பதிவு செய்யப்படுகின்றது. சங்க காலத்தில் சோதிடர்கள் விண்மீன்களின் இடத்தினை அடிப்படையாகக் கொண்டு காலத்தைக் கணிப்பதிலும் நல்ல தாள் மற்றும் நேரத்தைக் கூறுவதிலும் நிபுணர்கள் இருந்தனர். நற்றிணையில் சந்திரகிரகணம் பற்றிய செய்தி காணப்படுகின்றது. இதனை,

"பாம்பூர் மதியின் நுதல் ஒளி பரப்பவும்" (நற். 128)

என்ற பாடல் வரியில் தலைவியின் நெற்றிக்கு உவமையாக சந்திரன் குறிப்பிடப்பட்டுள்ளது. இராகுவினால் கவரப்பட்ட திங்களின் ஒளி கெடுவதைப் போல உன்னுடைய நெற்றியின் ஒளி மறைவுபட்டிருந்தது என தலைவன் தலைவியிடம் கூறுகிறான். இதன் மூலம் சந்திரகிரகணம் என்ற வானிபநிகழ்வு இருந்திருக்கிறது என்பதை அறிய முடிகின்றது. மேலும் சந்திரன் குளுமையான கிரகம், நீர் கிரகம் என்றும் குறிப்பிடப்படுகிறது. இதனை,

"இன்று தக்கனைமன் போலா என்றும்
நிறையுறு மதியின் இலங்கும் பொறையன்" (நற். 396)

இப்பாடலில் திங்களின் குளிர்ச்சி போல பெண்களின் தோள்கள் குளிர்ச்சி தருவதாக பாடியுள்ளார். குளிர்ச்சி என்பது சந்திரனின் செயல்பாடுகளாக சோதிடவியலில் கூறப்படுகிறது.

**சகுனம் பற்றிய நம்பிக்கை:**

சங்க இலக்கியத்தில் சகுனம் என்ற சொல்லிற்கும் புதிவாக புள் மற்றும் நிமித்தம் ஆகிய சொற்கள் பயன்படுத்தப்பட்டன. இயற்கையின் மாற்றங்கள், பறவைகளின் ஒலிகள் மற்றும் விலங்குகளின் செயல்பாடுகளைக் கொண்டு நன்மை, தீமைகளை முன் கூட்டியே அறியும் வழக்கம் மக்களிடையே பரவலாக இருந்துள்ளது. சகுனம் என்பது மூடநம்பிக்கையாக மட்டுமல்லாமல் ஆபத்துகளில் இருந்து தப்பிக்கக இயற்கையும் விலங்குகளும் கொடுக்கும் எச்சரிக்கையாகவும் இருந்துள்ளது. சங்ககாலச் சிற்றூர்களில் வாழும் மக்கள் பலவகை நம்பிக்கைகளையும் சடங்கு முறைகளையும் கையாண்டுள்ளனர்.

“வேதின வெரிநின் ஓதி முது போத்து
ஆறுசெல் மாக்கள் புள்கொள பொருந்தும்” (குறுந். 140)

என்ற பாடலில் மூலம் பாலை நிலத்தில் வழி செல்வோர் அங்கு மரங்களில் காணப்படும் ஓதி என்னும் ஒரு வகையான பல்லியின் மீது நம்பிக்கைக் கொண்டிருந்தனர். அதாவது தான் செல்லும் பயணத்தின் போது ஆண்ஓதியைக் காணும் போது தீமை உண்டாகும் என்று நம்பிக்கைக் கொண்டனர் என்பதை அறிய முடிகின்றது.

**சடங்கு நம்பிக்கை :**

சடங்கு என்பது மக்களால் மக்களுக்காக ஏற்படுத்தப்பட்ட ஒரு வரன்முறையாகும். முன்னோர்கள் மேற்கொண்டதை அப்படியே பின்பற்றுவது சடங்கு எனப்படுகிறது. சடங்குகள் பல்வேறு நோக்கங்களின் அடிப்படையில் மேற்கொள்ளப்படுகின்றது. குடும்பம் தழைக்க, நோயின்றி வாழ, துன்பங்கள் விலக, எதிரிகளை தண்டிக்க, இது போன்ற நோக்கங்களை முன்னிட்டு சடங்குகள் நிகழ்த்தப்படுகின்றன. “மணம்” என்ற சொல் நிறைந்த பொருளுடையது. எனவே திருமணச் சடங்கு என்பது பொய்யும் வழுவும் சமுதாயத்தில் தோன்றிப் பின் உருவானது என்பதை,

“பொய்யும் வழுவும் தோன்றிய பின்னர்
ஐயர் யாத்தனர் கரணம் என்ப” (தொல்.பொருள்.10)

என்ற தொல்காப்பிய நூற்பா மூலம் அறியலாம். மேலும் திருமணத்தின் போது சோற்றுடன் இறைச்சியும் சேர்த்து உண்டாக்கிய உணவை விருந்தளித்தும் திங்கள், உரோகணியும் கூடிய நன்னாளில் திருமண வீட்டை அழகு செய்து, காப்பு நூல் கட்டி, புது ஆடை உடுத்தி திருமணம் செய்து இருப்பதை,

“மைப்பு அறப் புழுக்கின் நெய்க்கனி வெண்சோறு

*தமிழ்த்துறை - சங்கரா அறிவியல் மற்றும் வணிகவியல் கல்லூரி (தன்னாட்சி)

வரையா வண்மையொடு புரையோர்ப் பேணி
அம்கண் இருவிசும்பு விளங்க திங்கட்
சகடம் மண்டிய துகள்தீர் கூட்டத்து" (அகம். 136)

என்னும் பாடலடிகளின் மூலம் அறிய முடிகின்றது.

**கனவு நம்பிக்கை:**

கனவு என்பது வெறும் கற்பனையாகக் கருதப்படாமல் அது எதிர்காலத்தை உணர்த்தும் நிமித்தமாக நம்பப்பட்டது. பிரிவில் உள்ள தலைவன், தலைவி கனவில் காண்பதை நனவில் நடக்கும் என்ற நம்பிக்கையைக் கொண்டிருந்தனர். இரவில் நாம் ஆழ்ந்த உறக்கத்தில் இருக்கும் போது தோன்றுவது கனவாகும். இதில் அதிகாலையில் தோன்றும் கனவு பலிக்கும் என்பது நம்பிக்கை. இதனை,

"புதுவது கவினினை என்றியாயின
நனவின் வாரா நயனியாளனைக்
கனவில் கண்டுயான் செய்தது கேள்" (கலி.1286)

என்று கனவில் கண்ட தலைவன் நனவில் வருவான் என்று எண்ணித் தலைவி உயிர் வாழ்ந்ததைக் கலித்தொகைப் பாடல் அடிகள் எடுத்துக் காட்டுகின்றன.

**முடிவுரை:**

மனிதனின் தன்னல உணர்வும் சமுதாய உணர்வுமே நம்பிக்கையை வளர்க்கின்றன. மனிதனின் பிறப்பு முதல் இறப்பு வரை பல்வேறு சடங்குகளும், நம்பிக்கைகளும் பின்பற்றப்படுகிறது. தமிழரின் வாழ்வியல் சடங்குகளும் பெரும்பாலும் அக்கால மக்களின் நம்பிக்கை சார்ந்தே அமைந்துள்ளதைக் காண முடிகின்றது.

*தமிழ்த்துறை - சங்கரா அறிவியல் மற்றும் வணிகவியல் கல்லூரி (தன்னாட்சி)